அ.வ.எண்: 149/2019 நாள்:18.07.2023

வா.சா.1. ராஜேஸ்வரி

1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :

1) என் பெயரில் தனிபட்டா வந்த பிறகு பட்டா எண்.384 க்கு வரி கட்டுனேனா என்றால் அரசாங்கத்தில் நிலவரி போடவில்லை. தனிபட்டாவிலேயே எவ்வளவு வரி என்று கண்டுள்ளதா என்றால் நான் கவனிக்கவில்லை. எல்லா பட்டாவிலேயும் அரசாங்கத்திற்கு கட்டவேண்டிய வரி விவரங்கள் கண்டுள்ளது நான் கட்டவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 998 பட்டாவிற்கும் நான் வரி கட்டவில்லை என்றால் சரிதான். 2017 விற்கு பிறகு நான் வரி கட்டவில்லை என்றால் சரிதான்.

2) என்னுடைய கிரைய பத்திரத்தில் 60 செண்ட் மட்டும் என் வசம் உள்ளதாக அதில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். 229/3 மொத்த விஸ்தீரணம் 1 ஏக்கர் 68 செண்ட்ம் ஆதிலிருந்தே அப்பாவு பிள்ளை என்பவரிடம் குத்தகை அனுபவத்தில் இருந்து வந்தது என்று சொன்னால் சரிதான். நான் கிரையம் வாங்குவதற்கு முன்னால் அப்பாவுபிள்ளை மகன் செல்வம் குத்தகை பாத்திய விடுதலைபத்திரம் பதிவு செய்துள்ளார் என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கிய போது பதிவு பத்திரத்தை பார்த்தேனா என்றால் நான் பார்க்கவில்லை என்னுடைய தகப்பனார் சொன்னார்.

3) தாவா சொத்து 33 செண்ட் எனக்கு எப்படி அனுபவம் வந்தது என்றால் ராமசாமி செட்டியாரும் அவரது மகன் சுந்தரம் செட்டியாரும் என்னிடம் கொடுத்தார்கள். என்னுடைய பிராதில் என் அப்பா அம்மாவிடம் அனுபவம் கொடுத்தார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் அவர்கள் மூலமாக அனுபவம் செய்து கொண்டேன். கூட்டுபட்டாவாக இருந்த காலத்தில் தான் புல எண்.229/3 வரி செலுத்தினேன் தனிபட்டாவாக தாவா சொத்து இருந்த போது வரி செலுத்தவில்லை என்றால் சரிதான்.

4) தாவா சொத்துக்கு முதல் பிரதிவாதி பானுமதி பெயரில் தனிபட்டா கொடுத்தார்களா என்றால் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 மற்றும் 2 ஆகியவை நன்கொடை செலுத்தியதாக உள்ளதா என்றால் ஆமாம். வா.சா.ஆ.2 வழக்கு தாக்கல் செய்வதற்கு வழக்கு தாக்கல் செய்வதற்கு 5 நாட்களுக்கு முன்பு தேதி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.24 மற்றும் 25 வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பிறகு பெறப்பட்டதாக தேதி உள்ளது என்றால்

சரிதான். மேற்படி 2 ரசீதுகளிலும் நன்கொடை என்று தான் கண்டுள்ளது என்றால் சரிதான். ராமசாமி செட்டியார் தாவா சொத்தை என்னிடம் கொடுத்து கோவில் குத்தகைக்கு கொடுக்க சொன்னதற்கு எழுத்து பூர்வமாக ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான்.

5) நான் இவ்வழக்கில் கொடுத்துள்ள ஆவணங்கள் எதுவுமே தாவா சொத்துக்கு உரியவை அல்ல என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தையே முதல் பிரதிவாதி பானுமதி, ராமசாமி செட்டியார் வாரிசுகளிடம் இருந்து கிரையம் பெற்று நாளது தேதி வரை அனுபவம் செய்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. எனக்கும் பிரதிவாதி பானுமதிக்கும் தஞ்சாவூர் மாவட்ட நீதிமன்றத்தில் பாகபிரிவினை வழக்கு நடைபெற்று வருகிறது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் பானுமதிக்கு என் தாயார் உயில் எழுதிவைத்துள்ளதாக கட்சி செய்து வழக்கு நடத்திவருகிறார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி பாகபிரிவினை வழக்கை மனதில் வைத்து கொண்டு இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:**

இல்லை.

/ஒ.ம்./

பெ. சந்திரசேகர், பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருவையாறு.